# யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு 1990-91 கல்வியாண்டு 866 மாணவர் தெரிவு

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 262 வெள்ளி 02-11-1990 (ஐப்பசி 16) ற. ஆகிர் 13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு 1990-91 ஆம் கல்வியாண்டுக் காலத்திற்கு 866 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்தபோது பல அனர்த்தங்கள், அசௌகரியங்கள், வசதியீனங்கள் என்பனவற்றின் மத்தியில் இவ்வளவு தொகை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இந்த நிலையிலும் கல்வியை மேற்கொள்ளப் பல்வேறு வசதிகளையுடைய கொழும்பு மாணவர்களைவிட இவர்கள் அதிக புள்ளிகளைப்பெறவேண்டியிருந்தது. இதன்படி மருத்துவத்திற்குக் கொழும்பு 271 புள்ளிகள், யாழ்ப்பாணம் 272 புள்ளிகள், பல் மருத்துவத்திற்கு இரு மாவட்டங்களிலும் 269 புள்ளிகள். மிருக வைத்தியம் கொழும்பு:- 265, யாழ்ப்பாணம்:- 266, விவசாயம் - கொழும்பு:- 249, யாழ்ப்பாணம் :-250, பொறியியல் கொழும்பு:- 267, யாழ்ப்பாணம்:- 273, வர்த்தகம் கொழும்பு 242, யாழ்ப்பாணம் 245, எனத் தெரிவு இடம்பெற்றது (66)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும்

# யுத்தத்தைஉடன் நிறுத்துமாறு கனேடிய அரசு கோரிக்கை

## பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் வெளிவிவகார அமைச்சிடம் கடிதம்

**வடக்குக் கிழக்கில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்திப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு கனேடிய அரசு ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுள்ளது.**

கனேடிய வெளிவிவகார அமைச்சின் செயலர் ஜோ கிளாக் எழுதிய உத்தியோகபூர்வ கடிதம் நேற்று கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்தினால் வெளிவிவகார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

வடக்குக்கிழக்குப் பிரச்சினை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படவேண்டியது. எனவே பேச்சுவார்த்தைகளைஉடனே தொடங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஏற்கனவே கனடா அவுஸ்திரேலியா, அமெரிக்கா நாடுகளின் பிரதிநிதிகள் பிரதமர் விஜேதுங்கவை பாரிஸில் சந்தித்துப் பேசியுள்ளனர். எனவும் இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மன்னாரில் புலிகள் - ராணுவம் நேற்றுக் காலை முதல் மோதல்

நேற்றுக்காலை ஆறு மணியளவில் மன்னார் தீவின் தாழ்வுப்பாட்டிற்கு 5 பெரிய பீரங்கிப் படகிலும், ஏழு சிறிய பீரங்கிப்படகிலும் ராணுவம் தரையிறங்கியது. இவர்களுக்கு உதவியாக 5 ஹெலிகளும் இரு பொம்மர்களும், ஓர் அவ்ரோ விமானமும்தாக்குதலில்ஈடுபட்டன

இதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்துள்ள விடுதலைப்புலிகள் ராணுவத்திருடன் மோதலில் ஈடுபட்டனர். மோதல்கள் நேற்று முழுவதும் தொடர்ந்தன.

இதேசமயம் தள்ளாடி முகாமில் இருந்து பவள் கவச வாகனம் ஒன்றில் வந்த ராணுவத்தினர் மீதும் புலிகள் கறிச் சாட்டிப்பாலத்தில் வைத்து தாக்குதலைத் தொடுத்தனர். சேதவிபரம் தெரியவரவில்லை.

## மணலாறு மினிமுகாம் நேற்று விடுதலைப் புலிகளால் அழிப்பு

நேற்று அதிகாலை மணலாறு மாவட்டத்தில் (வெலிஓயா) ராணுவ மினி முகாம் ஒன்றை வடுதலைப் புலிகள் தாக்கி அழித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் முந்திரிகைக்குளம் ராணுவ முகாமிற்கும் சாம்பன் குளம் ராணுவமுகாமிற்கும் இடையில் உள்ள இந்த மினிமுகாம் இவ்வாறு தாக்குதலுக்குள்ளானது.

இத்தாக்குதலில் பத்துச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர், புலிகள் தரப்பில் மேஜர் சங்கர் (மூதூர்) 2-ம் லெப்- மதுவன் (சாவகச்சேரி) முசோலினி (மூதூர்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்றைய தாக்குதலில் மினிமுகாமில் இருந்து விடுதலைப்புலிகளால் பெருந்

— 04ஆம் பக்கம் பார்க்க

## விவசாயபீடம் டிச. 3 ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் டிசம்பர் மாதம் 3-ம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படும்.

இரணைமடு சந்தியிலுள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் முதன்முதலாகத்தொடங்கவிருக்கும் இப்பிரிவில் கல்வி கற்க 26 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

ஐந்து நிரந்தர விரிவுரையாளர்களும் ஏழு உதவி விரிவுரையாளர்களும் செய்முறை காட்டுநர்களும் இங்கு கடமையாற்ற விருக்கின்றனர். இத்துறை சார்ந்த ஏனைய திணைக்களங்களில் வேலை செய்பவர்களும் பகுதி நேர விரிவுரையாளர்களாகக் கடமையாற்றவிருக்கின்றனர்.

இதேவேளை இப்பீடத்திற்கான நிரந்தரக் கட்டிட வேலைகள் கிளிநொச்சியில் நடைபெற்றுவருகின்றது. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

## ஜா - ரஞ்சன் கொழும்பில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை

நேற்று முன்தினம் கொழும்பில்இந்தியத்தூதுவர்என்.என் ஜாவுக்கும் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவுக்கும் இடையில் திடீர் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப் பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் ஏதும் வெளிவரவில்லை.

... 4 ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றத்தில் தினேஷ்குணவர்த்தனா

## மலையகத்தமிழர்கள் மன்னாருக்கு விரட்டி அனுப்பப்படுவராம்

மலையகத்தில் வசிக்கும் இந்தியத் தமிழர்கள் எருக்கலம் பிட்டிக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுமென மஹரகம உறுப்பினரும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தனா எச்சரித்துள்ளார்.

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் மன்னார் விவகாரம் சம்பந்தப்பட்ட விவாதத்தில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்க்கட்சித்தலைவி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் உரையாற்றினார்கள்.

## திருமலையில் ஊர்காவலர் மீது தாக்குதல், 3 பேர் பலி

நேற்றுக்காலை திருமலையில் அளுத் ஓயாவிற்கும் கித்துலுத்துக்கும் இடையில் உழவு இயந்திரம் ஒன்றில் வந்த ஊர்காவற்படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தில் 3 ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டனர். உழவு இயந்திரமும் சேதமானது.

இதேசமயம் குச்சவெளிக் கடற்படைத் தளம் மீது புலிகள் நடாத்திய சினைப்பர் தாக்குதலில் இரு கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

## 30தலையில்லாச் சடலங்கள்

அக்கரைப்பற்றில் முப்பது பேருடைய சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சடலங்களில் அநேகமானவற்றின் தலைகள் துண்டிக்கப்பட்டிருந்ததாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன நேற்றுக் கொழும்பில் ஊர்ஜிதம் செய்தார்.

இக் கொலை பற்றி விசாரணை நடாத்தப்படுமெனவும் அவர் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தமிழ் நாட்டின் அகதிமுகாமில் 'டெலோ' உறுப்பினர் கொலை

தமிழகம் கொட்டப்பட்டி அகதிமுகாமில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார், மற்றும் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம்நிகழ்ந்துள்ள இக்கொலை தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ் இயக்

— 04ஆம் பக்கம் பார்க்க

## சுயவிருப்பத்தில் இளைப்பாறும் ஊழியர்களுக்கான ஏற்பாடுகள்

### 18. 10. 90 இல் வெளியான பொது நிர்வாக சுற்று நிருபம் 44/90

1 அரசாங்கம் பின்வரும் சலுகைகளைத் தனது ஊழியர்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளது.

2. இவ்வேற்பாடு சகல தரங்களிலுமுள்ள அரச ஊழியர்களுக்கும் பொருந்தும்.

3. நிரந்தரமான பதவிவகிக்கும், பதவி உறுதிசெய்யப்பட்ட, பத்துவருட ஒய்வூதிய சேவையைப் பூர்த்திசெய்த ஒருவர் இளைப்பாற உரித்துடையவர்.

(அ) 10 வருடத்துக்கு மேல் ஆனால் 20 வருடத்துக்கு உட்பட்ட சேவை உடைய ஒருவர் இளைப்பாறும் போது, அவர் பெறும் ஒய்வூதியம் பின்வருமாறு கணிக்கப்படும்,

(i) இளைப்பாறும்போது மாற்று (Commuted) ஒய்வூதியமும்.

(ii) முதல் நியமனத்திகதியிலிருந்து 20 வருடசேவை முடியும் போது அல்லது அவர் 55 வயதை அடையும்போது (எது முந்துகிறதோ அது), குறைக்கப்பட்ட மாதாந்த ஒய்வூதியமும் (அதாவது இளைப்பாறும்போது பெற்ற சம்பளத்தின் 80 வீதம்) இத்தகைய ஒருவர் குறைக்கப்பட்ட ஒய்வூதியம் பெறத்தொடங்கியதிலிருந்து 120 மாதத்தின்பின், முழு ஒய்வூதியமும் (90 வீதம்)பெற உரித்துடையவராவர்.

(ஆ) 20 வருடத்துக்கு மேற்பட்ட ஆனால் 30 வருடத்துக்குக் குறைந்த சேவையுள்ள ஓர் அரச ஊழியர், இளைப்பாறும் போது பெற்ற சம்பளத்தின் 90 வீதம் ஒய்வூதியத்துக்கு உரித்துடையவர். அது பின்வருமாறு கணிக்கப்படும் :-

(i) மாற்று (Commuted) ஒய்வூதியமும்.

(ii) இளைப்பாறும் போது, குறைக்கப்பட்ட ஒய்வூதியமும் (கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 80 வீதம்). இத்தகைய ஒருவர், ஒய்வூதியம் பெறத்தொடங்கிய நாளிலிருந்து 120 மாதம் முடிந்ததும், குறைக்கப் படாத மாதாந்த ஒய்வூதியம் (90 வீதம்) பெறுவார்.

(இ) 30 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஓர் அரச ஊழியர், அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 90% பெற உரித்துடையவர். இது பின்வருமாறு கணிக்கப்படும்.

(i) மாற்று (Commuted) ஒய்வூதியத்துடன்

(ii) இளைப்பாறும்போது ஒய்வூதியம் பெற்றிருந்தாலும், குறைக்கப்படாத மாதாந்த ஒய்வூதியம் (சம்பளத்தின் 90 வீதம்)

4. இச்சுற்று நிருபத்தின் 3 (அ), 3 (ஆ), 3 (இ) ஏற்பாடுகளின் கீழ் 1. 1. 1991 இலோ அதற்கு முன்னோ இளைப்பாறும் ஊழியர் ஒருவர், அவர் 59 வயது முடியுமுன் ஒய்வுபெறும் பட்சத்தில், மாற்று ஒய்வூதியத்துக்கு மேலாக, குறைக்கப்படாத 6 மாத ஒய்வூதியத்துக்குச் சமமான தொகையை மிகை ஊதியம் (bonus) ஆகப்பெறுவார்.

5. இவ்வாறு சொந்த விருப்பின்பேரில் இளைப்பாறும் ஒருவர் அரச சேவையிலோ, மாகாண சேவையிலோ, அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ, கொம்பனிகள் சட்டத்தின்கீழ்ப்பதிவு செய்யப்பட்ட - அரசாங்கம் 50வீதம் பங்குகள் வகிக்கும் - கொம்பனிகளிலோ, அரசாங்கத்தின் சொந்த வியாபார முயிற்சி எதிலுமோ திரும்ப வேலைக்கு அமர்த்தப்படமாட்டார்.

6. விருப்பத்தின்பேரில் ஊழியர் இளைப்பாறுவதால் உண்டாகும் வெற்றிடங்கள் சம்பள ஆளணி செயற்குழுவின் மீள் பரிசீலனையின் பின், பட்ஜெற் இயக்குநரின் அங்கீகாரம் பெற்றே நிரப்பப்படும்.

7. இந்தச் சுற்று நிருபத்தின் இணைப்பு 'A' மூலம் ஒருவர் தமது விருப்பத்தைத் தெரிவித்ததுடன், சம்பந்தப்பட்ட திணைக்களம் குறித்த ஊழியரின் பென்ஷன் விண்ணப்பத்தைத் தயாரித்து பென்ஷன் இயக்குநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கும்.

8. கூட்டுத்தாபனங்கள், சட்ட அங்கீகாரமுள்ள பிற நிறுவனங்கள் முகவர் நிலையங்களுக்கென விடுவிக்கப்பட்ட அலுவலர்கள், தாம் முன்பு வகித்த பதவிகளுக்குத் திரும்பிய பின்பே, இந்த விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்.

(மிகுதி நாளை)

## 1000, 500 ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்கும் முடியாத நிலை

அரசாங்க, தனியார்துறை ஊழியர் ஒய்வு ஊதியம் பெறுவோர், ஆசிரியர் . ஆகியோருக்கு கடந்த மூன்று மாத காலமாக உரிய முறையில் ஊதியம் வழங்கப்படாமையாலும், பல தொழில் ஸ்தாபனங்கள் வியாபார நிலையங்கள் செயல் இழந்து இருப்பதனாலும் யாழ்ப்பாணத்தில் என்றும் இல்லாதவாறு ஏற்பட்டிருக்கும் பண வீக்கத்தினால் 1000, 500 ரூபாய் நோட்டுகளை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சில வியாபாரிகள் இந் நோட்டுகளை மாற்றுவதற்கு தரகு அறவிடுவதாகவும் ஒரு சிலர் ஏதாவது பொருட்களை அவர்களிடம் கொள்வன்வு செய்தால்தான் மட்டுமே மாற்றிக் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் கடந்த காலத்தில் தட்டுப்பாடாக இருந்த ஒன்று, இரண்டு, ஐந்து ரூபா நாணயங்கள் தற்பொழுது தாராளமாக புழக்கத்திற்கு வந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த நாணயங்கள் யாவும் வீடுகளில் உண்டியல்களில் சேமிக்கப்பட்ட நாணயங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது (16)

## கனடாவில் இலங்கைத் தமிழ் திரைப்படம்

கனடா டொரன்டோவில் அடுத்த வருடம் இலங்கைத் திரைப்படவிழா நடைபெறவுள்ளது.

இத்திரைப்பட விழாவில் திரையிடுவதற்கென இலங்கைத்திரைப்படக் கூட்டுத்தாபனம் தமிழ்த் திரைப்படமொன்றையும்அனுப்பிவைக்கவுள்ளது.

★ ஜிகாத் அட்டகாசம் பற்றித் தப்பி வந்த கல்முனை வாசி தகவல்:

# அண்ணன்கள் வெட்டிக் கொலை

# தங்கை கெடுக்கப்பட்டுக் கொலை!

என் அண்ணன்மார் இருவர் முஸ்லிம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். என் தங்கை ஜிகாத் இயக்கத்தினரால் பலவந்தமாகக் கெடுக்கப்பட்டு கொல்லப்பட்டாள். என் குடும்பத்திற்கு மட்டுமல்ல கிழக்கு மாகாணத்தில் பல தமிழ்க்குடும்பங்களுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கல்முனை 3-ம் குறிச்சியைச் சேர்ந்த இ. செல்வநாயகம் எமது நிருபருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கில் சிங்கள இராணுவம் தனது அடாவடித்தனங்களைப்புரியும்போது முஸ்லிம் காடையர்களும் இதுதான் தருணம் என அவர்களுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

கலவரம் காரணமாக நான் எனது குடும்பத்தினருடன் கல்முனைப் பகுதியில் அகதி முகாம் ஒன்றில்தஞ்சமடைந்திருந்தேன். அங்கு பல தமிழ் மக்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர்.

அந்த அகதிமுகாம்களுக்கு ஒவ்வொரு நாளும் இரவில் வாகனங்களில் முஸ்லிம் காடையர்களும், ஜிகாத் இயக்கத்தினரும் வருவார்கள்.

இவர்கள் தினமும் 10 பெண்களை கதறக் கதற வாகனத்தில் இழுத்து ஏற்றுவார்கள். இக் கொடுமையைக் சகிக்காது முகாமிலிருந்து யாராவது எதிர்ப்புக்காட்டினால் அவர்களும் வாகனத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்படும் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட பின்னர் சிலர் அகதிமுகாம்களுக்கு கொண்டு வந்து விடப்படுவார்கள். ஏனையோர் கொல்லப்பட்டு விடுவார்கள். எனது தங்கையும் இந்த முகாமில் இப்படித்தான் கொல்லப்பட்டார்.

நாம் அந்த அகதி முகாமில் சிறைப்பட்டவர்கள் போல தினமும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தோம். அதே நேரம் எமது சொத்துக்களை முஸ்லிம் காடையர்கள் அபகரித்துக் கொண்டிருந்தனர். முகாமிலிருந்து ஒருவாறு தப்பிய நாம் காட்டிற்குள் சிறிது காலம் வாழ்ந்து வவுனியாவை வந்தடைந்தோம்.

கிழக்கில் முஸ்லிம் காடையர்கள் வாள், கத்தி, பொல்லுகளுடனும் ஜிகாத் இயக்கத்தினரும், முஸ்லிம் ஊர் காவல் படையினரும் ஆயுதங்களுடன் நடமாடுகிறார்கள். இவ்வாறு செல்வநாயகம் தெரிவித்தார்.

## எம். எஸ். ஸிற்கு மேலும் கௌரவம்

ஐக்கிய நாடுகள் சபையில் ஊதாண்ட் பொதுச்செயலாளராக இருந்த காலகட்டத்தில் தன் இசைக்கச்சேரி மூலம் இந்தியாவின் கீர்த்தியைப் பெரிதும் உயர்த்தியவரும், மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேருவால் இணையற்ற இசைக்குயில் எனப் பாராட்டப்பெற்றவருமான எம் எஸ். சுப்புலக்ஷ்மிக்கு நேற்று முன்தினம் இந்திரா காந்தி நினைவான தேசிய வுருமைப்பாட்டுச் சிறப்பு விருதுவழங்கிக் கௌரவமளிக்கப்பட்டது.

திரு. ராஜீவ்காந்திஇதனைத் தன் அன்னையின் நினைவாக அவருக்கு வழங்கினார்.

திருமதி சுப்புலக்ஷ்மி இவ் விருதுத் தொகையாகத் தனக்கு அளிக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவை சென்னையில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சிக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

## இடம் பெயர்ந்த கிழக்குமாகாண ஊழியர்கூட்டம்

கிழக்குமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த ஊழியர்சங்கக் கூட்டம்4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறைஊழியர்களை தவறாது இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் சோ. சுந்தரராஜா கேட்டுள்ளார். (74)

## மருந்துவிற்பனையில்ஒழுங்குபேண விற்பனையாளருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கில மருந்து வர்த்தகர்கள் எந்தவொரு மருந்தையும் அதிகூடிய சில்லறை விலையிலும் பார்க்க விலைகூட்டி எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாதென யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர்சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில்;

ஆங்கில மருந்து விற்பனையாளர்களும், விநியோகிப்போரும், இறக்குமதி செய்வோரும் தரமான மருந்துப் பொருட்களை மட்டுமே சந்தைப்படுத்தல் வேண்டுமெனவும்,

காலாவதியான மருந்துப் பொருட்களை எக் காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மருந்துப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வேம்படி மாணவிகளுக்கு அறிவிப்பு

இதுவரை பாடசாலைக்கு சகமும் தராத வேம்படி மகளிர் உயர்தரக்கல்லூரி மாணவிகளை 5-ம் திகதி திங்கட்கிழமை முதல் பாடசாலைக்கு சமுகம் அளிக்குமாறு கல்லூரி அதிபர் செல்வி இ இராஜரட்ணம் அறிவித்துளளார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மயில்வாகனம் ஜெயந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், தெ, ப. நோ. கூ.சங்க அடையாள அட்டையும் கே. கே. எஸ். வீதியில் 31. 10.90 அன்று தவறவிடப்பட்டுவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தெல்லிப்பழை பல நோ கூ. சங்கத்தில் ஒப்படைக்கவும். 11014

### சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். "ஸ்கைலைன்ஸ்" 281B, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். "Skilines' 281B, Cloc k Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை) 11011

தெளிவானபோட்டோஸ்ரற் பிரதிகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீ காந் புத்தகசாலை, நல்லூர். மக்மிலன் புத்தகசாலை. ஒட்டுமடம். 10130

தெல்லிப்பளை ப. நோ. கூ, சங்கம்
(வரைவுள்ளது)

### ஊழியர்கள் கூட்டம்

மேற்படி எமது சங்கப் பணியாளர் கூட்டம் 03. 11. 1990 -ம் திகதி சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு தெல்லிப்பளை ப. நோ. கூ சங்க தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும். மாவீரர் தினம் பற்றி ஆலோசிக்கப்படும்.

ஊழியர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருக.

தலைவர்
01. 11. 1990 தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
11013

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)

### கலந்துரையாடல்

மேற்படி சங்கக் கிளைக்குழு, பொதுச்சபைப் பிரதிநிதி, இயக்குநர்கள், ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் 7. 11. 90 -ம் திகதி புதன்கிழமை காலை 8. 30 மணிக்கு தெல்லிப்பளை ப நோ கூ. சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும். மாவீரர் தினம் பற்றி ஆலோசிக்கப்பட வேண்டியிருப்பதால் சகலரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சி. சிவமகாராசா.
தலைவர்
1. 11. 90
தெல்லிப்ப்ளை ப. நோ. கூ. சங்கம்
11012

## முரசொலிக்கு வந்த கடிதம்

# தமிழனை ஜென்ம விரோதியாகக் கருதும் கிழக்கு முஸ்லிம்

ஆசிரியர்,
முரசொலி,

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தற்போது உள்ள நிலைமைபற்றி விளக்கவேண்டியது தமிழீழத் தாயகத்தின் ஓர் பிரிக்கமுடியாத அங்கமான கிழக்கு மாகாணத்தின் பரம்பரைத் தமிழன் என்ற வகையில் என் தலையான கடமை என்றபடியால் இக் கடிதத்தை எழுதுகிறேன்.

இங்கே முஸ்லிம் காடையர்கள் தமிழர்களை ஜென்ம விரோதியாகக் கருதிச் செயற்படுகிறார்கள். ஊர்காவல் படையில் உள்ள முஸ்லிம்கள் என்றில்லாமல் பெரும்பாலான முஸ்லிம் இளைஞர்கள்கூட அகால வேளைகளில் தமிழரை இம்சிக்கின்றனர். தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்கின்றனர். இவர்களைத் தட்டிக் கேட்க ஸ்ரீலங்கா இராணுவம்கூடத் துணிவதில்லை. தமிழர் நாமமே கிழக்கில் இருக்கக்கூடாது என்ற இவர்களின் தொடர் செயற்பாடுகளுக்கான கொடுமைகள் எண்ணிலடங்கா. இராணுவத்தைவிட இவர்களுக்கே நாம் கூடுதல் பயம்.

வடக்கிலிருந்து வவுனியா ஊடாகத் தென்பகுதி செல்லும் தமிழர்கள்கூட இத்தகையோரால் உடைமைகள் பறிக்கப்பட்டு கேவலப்படுத்தப்பட்டு வரும் சம்பவங்களும் சமீப நாட்களாக அதிகரித்துவரும் தகவலையும் வவுனியா சென்று வந்த நண்பர் ஒருவர் மூலம் அறியமுடிந்தது. இவற்றின் பின்னணியில் பெரும் சதித்திட்டம் ஒன்று இருப்பது என்னவோ மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை என்பது தெட்டத் தெளிவாகிறது.

வந்தாறுமூலை
கி. மாகாணம்

க. தர்மலிங்கம்
ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்

# 'பாதுகாப்பு' அனுமதி கிடைத்தாலே வடக்கிற்கு விசேட பரீட்சையாம்

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கிய பின்னரே வடக்கு, கிழக்கு மாகாண க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு விசேட பரீட்சை நடத்தப்படும் என பரீட்சை இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு-கிழக்கிற்கு விசேட பரீட்சையொன்றை நடத்த பரீட்சைத் திணைக்களம் எந்த நேரமும் தயாராய் உள்ளது.

ஆனால் அதற்கான அனுமதி இன்னமும் பர்துகாப்பு அமைச்சிடம் இருந்துகிடைக்கவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (11)

### யாழ் பாடசாலைகளில்

# விரைவான கற்பித்தலின் பின் வகுப்பேற்றம் நடைபெறும்

யாழ் கல்வித்திணைக்களத்தால் புதிதாகத் திட்டமிடப்பட்டு அறிமுகப்படுத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள் விரைவான கற்பித்தலுக்கு உட்படுத்தப் படவுளளன.

இப் பாடத்திட்டம் முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கு மதிப்பீட்டு, அடிப்படையில் வகுப்பேற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான கற்பித்தல் நடவடிக்கைகள் இவ்வாரத்திலேயே அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் மாணவர்களது வரவு பாடசாலைகளில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது முற்றாக இயங்க முடியாத நிலையில் உள்ள வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதிப் பாடசாலைகளில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர முடியுமென கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (32)

### வை. எம். சீ. ஏ. ஸ்தாபனங்களின்

# கல்கத்தா ஆசிய மகாநாட்டில் யாழ் நிலைமை பற்றி பிரஸ்தாபம்

ஆசிய நாடுகளைச் சேர்ந்த வை. எம் சீ. ஏ ஸ்தாபனங்களின் செயலாளர்கள் கலந்து கொண்ட வருடாந்த மகாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது.

இந்த மகாநாட்டில் யாழ்ப்பாண வை. எம், சீ. ஏ. ஸ்தாபனச் செயலாளர் எம். தம்பித்துரை கலந்து கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இலங்கை அரசினால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து கேட்டறிவதில் மிகவும் ஆர்வம் காட்டியதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக வடபகுதியைச் சேர்ந்த வை. எம், சீ. ஏ ஸ்தாபனங்கள் போதிய சேவைகளை ஆற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாக எம். தம்பித்துரை நமது நிருபரிடம் தெரிவித்தார். (27)

## பாடசாலை நடைபெறும்

பாடசாலையைத் தொடர்ந்து நடாத்துவதெனவும், பிள்ளைகளின் பாதுகாப்பிற்குப் பெற்றோரே பொறுப்பெனவும் நாவாந்துறை றோ. க. த. க. வித்தியாலயத்தில் சில தினங்களுக்கு முன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் சு மலக்கியாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெற்றோர், ஆசிரியர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர், பழையமாணவர்கள் பெருமளவிற் கலந்துகொண்டனர்.

தொடர் —02

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

— 'அரவிந்தன்'

### மதிலைத் தகர்க்க முயற்சி

கரும்புலிகள் மருந்து திணிக்கப்பட்ட லொறி ஒன்றினை கோட்டையின் கடற்கரைப்பக்கமான, கொங்கிரீட் கற்களால் பலமாக அடைக்கப்பட்ட வாயிலில் மோதினர். (பின்னர் இந்த வாயிலை உடைத்துக் கொண்டுதான் ஸ்ரீலங்கா இராணுவம் கோட்டையை விட்டுத் தப்பி ஓடியது). லொறி சிதறியது. மண் மூடைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் உதவியோடு கோட்டை மதிலை வெற்றிகொள்ள புலிகள் முயன்றனர். அம்முயற்சியில் கப்டன் அந்தோனி (அ. சத்தியசீலன்), கப்டன் சேரன் (க. சேனாதி), லெப். பூவதி (கு. குமாரசங்கர்) லெப். வக்கீல் (செ. உருத்திரதாஸ்), சுருளி (நந்தபாலன்) ஆகியோர் களப்பலியாகினர். முயற்சி வெற்றியளிக்கவில்லை. கோட்டையிலிருந்து ஷெல்கள் பறந்தன. யாழ்ப்பாண மக்கள், ஆஸ்பத்திரி நோயாளர் அனைவரும் மூட்டை முடிச்சுக்களுடன் இடங்களைவிட்டு வெளியேறினர்.

### ஒன்பது காவலரண்கள்

இந்நிகழ்வின் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் குண்டுவெடிப்புச் சத்தம் ஓயவில்லை. விடுதலைப் புலிகள் யாழ் கோட்டையைச் சுற்றி ஒன்பது காவலரண்களை அமைத்திருந்தனர். முதலாவது காவலரண் பண்ணைச் சந்தியில் திறந்த வெளியில் துணிச்சலுடன் அமைக்கப்பட்டு, சுரங்கப்பாதை மூலம் பண்ணைப் பொலிஸ் நிலைய விடுதிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. இரண்டாவது காவலரண் தொலைத்தொடர்பு நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இதனைப் பெண் புலிகள் நிர்வகித்தனர். மூன்றாவது காவல்ரண் கொட்டடி இடுகாட்டிலும், நான்காவது காவலரண் பெரிய தபாற்கந்தோர் கட்டிடத்திலும், ஐந்தாவது காவலரண் வீரசிங்கம் மண்டபக்கட்டிடத்திலும், ஆறாவது காவலரண் திறந்தவெளியரங்கிலும் ஏழாவது காவலரண் கோட்டைக்கு மிக அருகில். முற்றவெளி விளையாட்டரங்கிலும்,ஒன்பதாவது கர்வலரண் யாழ். பொலிஸ் நிலையத்திலும் அமைக்கப்பட்டிருந்தன.இவற்றினைவிட கோட்டையைச் சுற்றியுள்ள அனைத்துக் கட்டிடங்களிலும் புலிகள் காவலிருந்தனர். வடக்குப் பக்க காவலரண்களிலிருந்து யாழ்ப்டாண நகரத்திற்கு நிலத்தினடியாக வரக்கூடியளவிற்கு எலிவளைகளான சுரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இக் காவலரண்களோடு சேர்ந்த முற்றுகையை யாழ்ப்பாண மாவட்டத் தளபதி பானு வழிநடத்தினார்.

போர்த்துக்கேயர் ஆயிரம் பேர் வரையில் கோட்டைக்குள் அகப்பட்டிருக்க ஒல்லாந்தப் படைகள், யாழ் கோட்டையை முற்றுகையிட்ட வரலாற்று நிகழ்வை விடுதலைப் புலிகளின் முற்றுகை நினைவூட்டியது. கோட்டைக்குள் இருப்போருக்கு வெளியிலிருந்து உணவு, மருந்து, ஆயுதங்கள் எதுவும் செல்லாது தடுப்பதன் மூலம் சரணடைய வைப்பதற்காக ஒல்லாந்த கொமுசாறி வன்கோயன் செய்த அதே யுக்தியை தளபதி பானு நடைமுறைப்படுத்தினார்.

### முப்படைகளின் முழுப்பலமும்...

யாழ் கோட்டை முற்றுகையை முறியடிப்பதற்காக ஸ்ரீலங்கா இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் சேர்ந்து கூட்டாகத் தம் முழுப்பலத்தையும் பிரயோகித்தன. தினமும் யாழ்ப்பாண நகரத்தின் மேல் வந்த விமானங்கள் ஓய்வு ஒழிச்சலின்றி குண்டுமாரி பொழிந்தன. புலிகளின் காவலரண்க்ளைத் தகர்த்தெறிவதற்காகத் தம்முழுப்பலத்தையும் பிரயோகித்தன ஆயிரக்கணக்கான தொன் குண்டுகள் இம் முயற்சியில் பயன்படுத்தப்பட்டன. புலிகளின் காவலரண்களை இவற்றினால் எதிர்பார்த்த அளவு சேதப்படுத்த முடியவில்லை. கட்டிடங்கள் சிதைந்தன. யாழ்ப்பாண நகரம் இக் குண்டு வீச்சுக்களினால் முற்றாக நாசமாகியது. எந்த ஒரு கட்டிடமும் எஞ்சவில்லை. அனைத்தும் தகர்ந்து போயின. குருநகர், பாசையூர், மெயின்றோட் பகுதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

### அழிவு, அழிவு, அழிவு

குருநகரில் எந்த ஒரு கட்டிடமும் எஞ்சவில்லை. நகரத்திலிருந்து அரசடிவீதி வரையிலான பகுதிகள் அதிகம் குண்டு வீச்சுக்களுக்குள்ளாக ஏராளமான வீடுகள், பாடசாலைகள். சந்தைகள், தியேட்டர்கள், தேவாலயங்கள், கோயில்கள், மசூதிகள், வைத்தியசாலைகள் எதுவும் இக்குண்டு வீச்சுக்களுக்குத் தப்பவில்லை. சகடை என அழைக்கப்பட்ட வை-12 விமானம் வீசிய குண்டுகள் பாரிய கட்டிடச் சேதத்தை உண்டாக்கின. அவ்ரோ விமானங்கள் வீசிய பீப்பாக்குண்டுகள், பொம்மர்கள் வீசிய குண்டுகள், ஹெலிமூலம் நிகழ்த்திய றொக்கெட் தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அவயவங்களை இழந்தனர். வீடுவாசல்களை இழந்து அனாதைகளாகினர்.

### குண்டுகள் பலவிதம்

விமானக்குண்டு வீச்சுக்கள் பலவாறிருந்தன. நேபாம் குண்டுகளை ஒத்த குண்டுகளும், எரிகுண்டுகளும் வீசப்பட்டன. கண்மூடித்தனமாக வீசபபட்டன ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் மீதும் மலக்குண்டுகள் வீசப்பட்டன. தம் சார்பான தினசரிப் பத்திரிகைகளையும் விமானங்களிலிருந்து அவர்கள் கட்டுக்கட்டாக வீசினர். இறுதி நேரத்தில் பொம்மர்களிலிருந்து றொக்கெட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வீதிகளில் சென்று கொண்டிருந்த எதுவுமறியா அப்பாவி மக்கள் பலர் பலியாக நேர்ந்தது.

### அவ(ல)ச் சாவுகள்

விமானக் குண்டு வீச்சினால் நிகழ்ந்த பரிதாபகரமான துயர மரணங்கள் சில குறிப்பிடத்தக்கன, கொக்குவிலில் விமானங்கள் நிகழ்த்திய குண்டு வீச்சினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் பலியாகினர் அவர்களது அனைத்துச் சடலங்களும் ஒரே குழியில் இடப்பட்ட போது அக்கிராமமே அழுதது. ஒரே நேரத்தில் பத்து வானூர்திகள் வரையில் குண்டுகளை வீசியிருக்கின்றன. அக்குண்டுவீச்சினால் அம்பலவாணர் வீதியில் அறுவர் உடல்கள் சிதறிப்பலியாகினர். யாழ் புகையிரதச் சந்தியில் குண்டுவீச்சினால் எட்டுப் பேர் உயிரிழந்தனர் கிளிநொச்சி குடியேற்ற உத்தியோகத்தர் இ. சதாசிவம் இக் குண்டு வீச்சில் மரணமடைந்தார். யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் நிகழ்ந்த குண்டு வீச்சிற்கு நிலவளவையாளர் திருஞானசம்பந்தர் பலியாக நேர்ந்தது அரசடி வீதியில் நிகழ்ந்த றொக்கெட் தாக்குதலில் பொன்னுத்துரை வத்ஸலா என்ற இளம் பெண்ணும் ஆறுமுகம் பரமேஸ்வரன் என்ற வங்கியாளரும் அவமாகச் செத்தனர். நீராவியடியில் நிகழ்ந்த சகடைக் குண்டுவீச்சில் கோ. இராசப்பு என்ற தந்தையும் கனடாவிற்கு மறுநாள் மணமகளாகப் பயணப்படவிருந்த பெண் இ. சித்திராவும் அநியாயமாக இறந்தனர். மூத்திரைச் சந்தியில், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் க. பரராசசிங்கத்தின் மகன் சுதன் குண்டு வீச்சுக்கு இரையானார்.

### கல்லூரிகள், வைத்தியசாலைகள், வீடுகள்

விமானக்குண்டு வீச்சுக்களினால் கோட்டைச் சுற்றாடலில் மட்டுமன்றி வெளியிடங்களிலும் பல பாடசாலைக் கட்டிடங்கள் அழிந்தன. யாழ் மத்திய கல்லூரியின் பல கட்டிடங்கள் சிதைந்துபோயின. வேம்படி மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென் ஜேம்ஸ் கல்லூரி என்பன பாதிப்புற்றன. யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சில பகுதிகள் தரைமட்டமாகின. இந்துக் கல்லூரியின் ஒரு பகுதி சிதைந்துபோனது யாழ்ப்பாண வைத்தியசாலையின் பல கட்டிடங்கள் பாதிக்கப்பட்டன. தேசியசேமிப்பு வங்கியும் மக்கள் வங்கியின் பிரதான அலுவலகமும் தரைமட்டமாகின. யாழ்ப்பாண மாநகரசபைக் கட்டிடங்கள் பல குண்டுவீச்சினால் தொடர்ந்து சிதைந்து போயின. வெலிங்டன், வின்சர், லிடோ, சாந்தி, ஹரன் ஆகிய தியேட்டர்கள் முற்றாக எரிந்து அழிந்தன. யாழ் ஆயர் இல்லம், ஆசனக்கோயில் என்பன குண்டு வீச்சுக்களினால் பலத்த சேதங்களுக்குள்ளாகின. பிலிப் நேசிங்ஹோம் முற்றாகத் தகர்ந்தது. ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. தொடர்ந்து நிகழ்ந்த குண்டு வீச்சுக்களின் அதிர்வினால் வெடிப்படையாத வீடுகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இன்றில்லை.

(வளரும்)

# கடும் நோயாளிகள் 17 பேர் கப்பலில் கொழும்பு பயணம்

## மூவர் ஏற்கனவே மரணம்!

கொழும்புக்கு கப்பலில் கொண்டு செல்லப்படவிருந்த பதிவு செய்யப்பட்ட 25 கடும் நோயாளிகளில் மூவர் காலதாமதத்தால் ஏற்கனவே இறந்துவிட்டனர்.

சுமார் இருவாரங்களுக்கு முன்னர் இவர்களின் விபரம் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இதன்படி நேற்றுப் பருத்தித்துறையில் இருந்து மாலை மூன்று மணிக்குப் புறப்பட்ட குமணா என்ற கப்பலில் இந்த 25பேரில் 16பேரும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு உதவியாக அவர்களின் உறவினர்கள் ஒவ்வொருவரும் இரு டாக்டர்களும், இரு தாதியர்களும் கப்பலில் சென்றனர்.

கடந்த ஜூன் மாதம் முதல் யாழ் மாவட்டத்தில் இருந்து கடுமையான நோயாளிகள் எவரும் கொழும்புக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மிகுதிப்பேர் தாம் கடுமையான நோயாளிகளாக இருப்பதால் கொழும்பில் மரணமானால் தமது சடலங்களும் இங்கு வரமுடியாத நிலைமை ஏற்படலாம் என்பதால் கொழும்பு செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப11)

# யாழ் மாநகரப் பகுதிக்கு மின்சாரம் வரத் தாமதமாகும்

யாழ் மாவட்டத்திற்கு நேற்று முழுவதும் மின்சாரம் கிடைக்கவில்லை. தென்மராட்சி அல்லது கிளிநொச்சியிலேயே இத்தடங்கல் ஏற்பட்டிருக்கலாம் என யாழ் மின் அத்தியட்சகர் திரு. எஸ். ரீ. கணநாதன் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைப் பகுதியில் 25 மின் மாற்றிகள் இருந்தும் மூன்றில் மட்டுமே (ஒயில் இருப்பதனால்) இயங்கக் கூடியதாக விருக்கின்றன.

இதே வேளை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மின் அத்தியட்சகர்கள் பிரிவுகளில் யாழ் அத்தியட்சகர் பிரிவின் கீழ் உள்ள 70 மின் மாற்றிகளில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கக் கூடியதாக வுள்ளது.

இந்த நிலைமை அதிகமான இடங்களில் இருப்பதனால் யாழ் மாவட்டம் பூராகவும் மின்சாரத்தை வழங்க முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (66)

## துணைவேந்தர் மாணவர்களுக்கு வேண்டுகோள்

# யாழ் பல்கலைக்கழக புதிய மாணவர்களை துன்புறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் எமது நிரந்தரசொத்தான கல்வியை நாம் தொடரவேண்டும் என்ற நோக்கத்திலேயே யாழ் பல்கலைக்கழகம் 5ஆம் திகதி திங்கள் ஆரம்பமாகின்றது என்று துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

விமானத்தாக்குதல்கள், உணவுப் பிரச்சினை, மின்சார சீர்கேடு, மருத்துவ வசதியீனம் போன்ற பல பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் மாணவர்கள் இவற்றைப் பொறுமையுடன் சமாளித்து தமது கல்வியைத் தொடரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் புதிய மாணவர்களை துன்புறுத்தல் மற்றும் அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துதல்முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த துணைவேந்தர் புதிய மாணவர்களிடமிருந்து எவ்வித பணமும் அறவிடக்கூடாது என்றும், மாணவர் சங்கங்கள் அறவிடுவதனாலும் தமது அனுமதியுடனேயே மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். (66)

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

**மாணவர் வதிவிடம்**

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள் / அறைகள் தேவைப்படுகின்றன.

பல்கலைக்கழகத்திலிருந்து ஐந்து மைல் சுற்றாடலில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை/வீட்டின் ஒரு பகுதியினை/அறையினை வாடகைக்கு கொடுக்க விரும்பினால் விலாசத்தையும் எத்தனைமாணவர்கள் தங்கலாம் என்பதனையும் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு 05 11. 90க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்.
01. 11 90.
11015

# மன்னார் மாவட்டத்தில் காலவரையற்ற ஊரடங்கு

மன்னாரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கூட்டுப் படை நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டே மன்னாரில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிவித்தலொன்றில் மன்னார்தீவு உட்பட மன்னார் மாவட்டத்தில் நேற்றுக் காலை 5-45 மணி முதல் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது,

## ட்ரக் மீது பசிலின்-2000

நேற்று முன்தினம் மாலை மாவிட்டபுரத்தில் ராணுவத்தினரின் ட்ரக் ஒன்றின் மீது புலிகள் ஏவிய பசிலின் - 2000 ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது.

## தமிழ் நாட்டின்...

கத்தைச் சேர்ந்த ஏழுபேர் தமிழகப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மற்றும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர்.

கிளித்தட்டு விளையாட்டின்போது டெலோ இயக்கத்தினருக்கும், ஈ, பி.ஆர்.எல். எவ். இயக்கத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு இக் கொலையில் முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மணலாறு -

தொகையான ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

ஏ. கே. எல். எம் ஜி- 2, ரம் மகஸின்- 2, லிங்- 637, ஆர். பி. ஜி- 1, ஆர். பி. ஜி ஷெல் 4, புரோப்லர் 2, ஆர். பி ஜி கோல்ஸர்- 1, 60 எம். எம் மோட்டார்- 1, ஷெல்- 2, ரி-81- 1, மகஸின்- 8, ரி- 56 -II- 3, மகஸின்- 15, ரி- 56-1 ஐ. எம் ரவை- 2196, ஏ. கே கோல்ஸர்- 6, ரிபீட்டர்- 1, சொட்கன்- 3, 303 ரைபிள்-5 303 மகஸின்- 4, 303 ரவை 61, ஜே. ஆர் குண்டு- 3, தொலைத்தொடர்பு சாதனம் -1, ஹெல்மட்-4, சப்பாத்து -9சோடி, கிற்பாக்-1 என்பனவே புலிகளினால் மீட்கப்பட்டவையாகும்.

# உத்தரவு பெற்ற வர்த்தகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

யாழ் மாநகர உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் சங்கம் தற்பொழுது தரிக்கப்பட்ட மக்களுக்கு இலவசப் பொருட்கள் வழங்கும் விநியோகத்தில் தங்கள் கடைகளில் பதியப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு யாழ் உதவி அரச அதிபரோடு தொடர்பு கொண்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் தொடர்ந்தும் இலவசப் பொருள் விநியோகத்தை வழங்குவதற்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியிடம் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

உத்தரவு பெற்ற வியாபாரிகள் பொருட்கள் விநியோகித்த காலத்தில் மக்கள் இயூ வரிசைகளில் நின்றதில்லை. ஒரு நாளைக்கு 200 குடும்பங்களுக்கு விநியோகம் செய்ய முடியும் என்று அந்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள 24 உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு இலவச உணவுப் பொருட்கள் விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது போல், தங்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (33)

# மின்சார வயர் திருட்டு இளைஞர் தடுத்துவைப்பு

200 மீற்றர் மின்சார இணைப்பு வயரை வீதியில் அறுத்துத் திருடிய ஒருவர் சங்கானை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

5000 ரூபா பெறுமதியான இந்த வயர் சுருளும் மீட்கப்பட்டது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த இந்த இளைஞர் 11 வயதில் இங்கு வந்து ஒரு வீட்டில் வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்தவராகவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

# மலேஷியா பிரஜைக்கு 18லட்சம் ரூபா அபராதம்

கொழும்பு வந்த மலேஷியா பிரஜை ஒருவர், தங்கபிஸ்கட்டுக்களைக் கடத்திவந்ததால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரிடம் அகப்பட்டுள்ளார்.

தங்க பிஸ்கட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பதினெட்டு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# அக்கரையில் தவறிய பணம் இக்கரையில் கிடைத்தது

நேற்று முன்தினம் இரவு சங்குப்பிட்டியில் தவறவிட்ட பணத்தைக் கேரதீவுக் கரையில் தவறவிட்டவர் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் நோக்கி சங்குப்பிட்டியூடாக வந்த பெண்மணிஒருவர் சங்குப்பிட்டியில் தனது பணம் 5100ரூபாவையும் தவற விட்டு கேரதீவுக் கரையில் வந்ததும்பணத்தைக் காணாமல் கதறி அழுது கொண்டிருந்தார்.

இப்பணப்பையைக் கண்டெடுத்த இளைஞன் கேரதீவுக்கரையை அடைந்ததும் கதறி அழும் பெண்ணிடம் பணப்பையைக் கையளித்தான். இவரின் நேர்மையை பலரும் பாராட்டினார்கள். (71)

## மாணவருக்கான கலந்துரையாடல்

இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்வியங்காடு ரோமன்கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வியங்காட்டைச் சேர்ந்த சகல மாணவர்களுக்குமான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று சமுகந்தரக் கோரிக்கை

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளதபாற்பொதிகளை இன்று தபாலதிபர்கள் தவறாது யாழ் பிரதம தபாலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றது.

இத் தபால்கள் சேவகர்கள் ஊடாக நேரடியாக விநியோகம் செய்யப்படும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவை நாளை சனிக்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என்றும் எவரும் பிரதம தபாலகம் வந்து அலையத் தேவையில்லை என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (33)

## ஜா-ரஞ்சன்...

எனினும் பொருளாதாரம் குறித்தே தாம் பேச்சுக்கள் நடத்தியதாக நேற்று அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன செய்தியாளர்களிடம் கூறினார்.

## மிதிவெடியில் சிக்கினார்

பரந்தன் - மூரசுமோட்டையில் ஏற்கனவே வைக்கப்பட்ட மிதிவெடியில் சிக்கிய என். விவேகானந்தன் (28) பலத்த காயம் அடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ப11)

## கொடிகாமத்தில் எழுச்சி யாத்திரை

மாவீரர் நினைவாக விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் தென்மராட்சிப் பிரிவு மேற்கொண்டுள்ள எழுச்சி யாத்திரை இன்று 2ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கொடிகாமம் கச்சாய் வீதியிலுள்ள மாவீரர் மண்டபக்கட்டிடத்தில் ஆரம்பமாகின்றது.

இவ் வைபவத்தில் தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் அமுதினி, அரசியல் பொறுப்பாளர் பாப்பா உட்பட பல பிரமுகர்களும் மாவீரர்களின் பெற்றோர்களும் கலந்து கொள்கின்றனர். 2-ஆம் திகதியில் தொடங்கிய எழுச்சியாத்திரை 20-ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

## முக்கிய கூட்டம்

யாழ் மாவட்டச் சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச இயக்குநர் சபைக் கூட்டம் நாளை 3-ம் திகதி பிற்பகல் 9 மணிக்கு அதன் நீர்வேலி தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இயக்குநர் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (60)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 02-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.